**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 159/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : திரு. இரவிவர்மன் |
| Father/Husband's Name | : மகேந்திரகுமார் |
| Village | : பாலூர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாலூரில் வசித்து கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். பாலூர் ரூ கண்டிகை போகும் செல்லும் வழியில் எனது வீடு உள்ளது. எங்கள் வீட்டின் பக்கத்தில் ஒன்றரை வருடத்திற்கு முன்பு ஒரு நாள் சுமார் பகல் 01.30 மணியளவில் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தேன். விபத்து ஏற்பட்டு அங்கு ஒரு லாரியிருந்தது. அந்த டிரைவர் அங்கு இருந்தார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி தான் என்று சாட்சி காண்பிக்கிறார்.

கலைவாணன் என்பவர் எங்கள் வீட்டு பக்கத்தில் புதியதாக குடிவந்திருந்தார். அவருக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அவரை ஆம்புலன்சில் நாங்கள் தான் ஏற்றி அனுப்பினோம். பாலூர் இரயில்வே கேட் தாண்டி எங்கள் வீட்டிற்கும், இரயிவே கேட்டிற்கும் இடையில் விபத்து நடந்திருந்தது. லாரியை யார் ஓட்டினார் என்று கேட்டால் ஆஜர் எதிரி தான். கலைவாணன் இறந்துவிட்டதாக எனக்கு பின்னிட்டு சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

விபத்து நடந்த இடத்திற்கும், எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 100 அடியிருக்கும். விபத்து நடக்கும் போது நான் வீட்டிலிருந்தேனா என்றால் ஆம். சத்தம் கேட்ட பிறகு தான் நான் சம்பவயிடம் சென்றேனா என்றால் ஆம். இருசக்கர வாகனமும், லாரியும் மோதி கொண்டதாக தான் இந்த வழக்கு என்றால் சரிதான். யாருடைய கவனகுறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தான் முதலில் சென்றேன். அதன் பிறகு நிறைய நபர்கள் வந்தார்கள். எந்தெந்த ஊரில் இருந்தவர்கள் இருந்தார்கள் என்று கவனிக்கவில்லை.

நான் சம்பவயிடத்திற்கு சென்ற பிறகு எவ்வளவு நேரம் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் அரைமணி நேரம் கழிதது வந்தார்கள். போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை எந்த நேரத்தில் விசாரித்தார்கள் என்றால் 01.30 மணிக்கு விபத்து நடந்தது. 02.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் ஏதாவது வாங்கினார்களா என்றால் கையொப்பம் வாங்கவில்லை. போன் நம்பரை மட்டும் வாங்கினார்கள். தற்போது நினைவில்லை. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் அளித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவததை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், இறந்தவர் எனது ஊர்க்காரர் என்ற முறையில் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 159/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 8 |
| Name | : Tr. Sathish |
| Father/Husband's Name | : Sagadevan |
| Village | : No.65, Bajanai Koil Street |
| Taluk | : Palur |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாலூர் கிராமத்தில் வசித்து டிரைவராக பணிபுரிகிறேன். சாட்சியிம் பார்வை மகசர் ஆவணம் காட்டப்பட்டது. அதில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். மேற்படி கையொப்பத்தை நான் பாலூர் செல்லும் வழியில் கோனாஞ்சேரி போகும் வழியில் செய்தேன். மேற்படி கையொப்பத்தை நான் 31.12 தேதியில் 2 ஆண்டுகளுக்கு முன்பு விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக மாலை 05.30 மணியளவில் போட்டேன். என்னுடன் தூயவன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் இது சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் மாலை 05.30 மணியளவில் செல்லும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 6, 7 நபர்கள் இருந்தார்கள். நான் கையொப்பம் இட்ட நேரததில் அங்கு யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் தூயவன், சரவணன், வசந்த், சுரேந்தர், சிலம்பரசன், இரவி ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்களிடமும் போலிசார்

கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். மேற்படி நான் சொன்ன நபர்களிடம் எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று கேட்டால் பைக்கில சென்று கொண்டிருந்தேன் விபத்து நடந்தது அந்த இடத்தில் இவ்வளவு நபர்கள் இருந்தார்கள் கையெழுத்து போட சொன்னார்கள் போட்டோம். தனித்தனி தாளில் தான் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஒரே தாளில் தான் வாங்கினார்கள். 5 நபர்கள் கையெழுத்து போட்டிருப்பார்கள். நான் எத்தனாவது கையொப்பம் போட்டேன் என்றால் நினைவில்லை.

போலிசார் என்னை மாலை 05,.30 மணிக்கு விசாரணை செய்த பிறகு மீண்டும் எப்போது விசாரித்தார்கள் என்றால் அதற்கு பிறகு என்னை விசாரணை செய்யவில்லை ஒரு முறை கடிதம் மட்டும் வந்தது பிறகு சாட்சி சொல்ல வந்தேன். நான் சாட்சியாக கையொப்பம் செய்த போது எந்த நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்தேன் என்றால் பாரத் பென்ட்ஸ் டைமனார் நிறுவனத்தில் பணிபுரிந்தேன். அதில் எனக்கு அடையாள அட்டை கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். நான் போலிஸ் விசாரணையில் அந்த அடையாள அட்டையை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. 31.12.2022 அன்று நான் எத்தனை மணிக்கு பணிக்கு சென்றேன் என்றால் அன்றைய தினம் நான் விடுமுறையில் இருந்தேன்.

நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல போலிசார் வந்தார்கள் நாங்கள் சம்பவயிடத்தில் இருந்தோம் நாங்கள் அனைவரும் சம்பவயிடத்தில் இருந்தோம். போலிசார் –05.30 மணிக்கு நான் கையொப்பம் போட்ட பிறகு எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் நான் கால் மணி நேரத்தில் கிளம்பிவிட்டேன். போலிசார் அப்போது அங்கிருந்தார்களா இல்லையா என்றால் இருந்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு வழக்கிற்கு வலு சேர்ப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் நேரில் பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct
Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 159/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 15 |
| Name | : திரு. நந்தகுமார் (உதவி ஆய்வாளர்) |
| Father/Husband's Name | : ராமலிங்கம் |
| Village | : ஒரத்தி காவல் நிலையம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது ஒரத்தி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 31.12.2022 அன்று பாலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது Heera என்பவர் மேற்படி தேதியில் அளித்த புகாரினை பெற்று பிரிவுகள் 279, 337 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**அந்த மாதிரி வரைபடம் அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும் பார்வை மகசர் சாட்சிகளான தூயவன், சதீஷ் மற்றும் சாட்சிகள் இரவிவர்மன், சுரேந்தர், சரவணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கு விபத்தில் இறந்து போன கலைவாணன் இறப்பதற்கு முன் முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் சதீஷ்ராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். பின்னர் வழக்கின்

விசாரணையின் போது விபத்தில் காயமடைந்து சிகிச்சையில் இருந்த கலைவாணன் என்பவர் இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 279, 304(ஏ) வாக மாற்றம் செய்து ஆய்வாளர் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன். **(அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அதசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைத்தேன் என்று கேட்டால் 20.03.2023 ல் அனுப்பினேன். காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை அனுப்புவதற்கான காரணத்தை நீதிமன்றத்திற்கு தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் பார்வை மகசரில் 2 வதாக கையொப்பம் இட்டுள்ள சதீஷை சம்பவயிடத்தில் விசாரித்து கையொப்பம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குக்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் நான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.